

# பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் நிர்மாணப் பணிகளை கண்காணிப்பதற்கான வழிகாட்டிகள்

USAID
FROM THE AMERICAN PEOPLE

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

**பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் நிர்மாணப் பணிகளை கண்காணிப்பதற்கான வழிகாட்டிகள்**

முதல் பதிப்பு 2012, நவம்பர்

டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா
இல. 06.
37ஆவது ஒழுங்கை,
இராணி வீதி,
கொழும்பு 03.

ISBN: 978-955-1281-56-4

**ஆலோசனை:**
டிலான் பெர்னான்டோபுள்ளே – ஆலோசகர் (பொறியியலாளர்), இலங்கை உள்ளூராட்சி பயிற்சி நிலையம்
W.A.P. விஜேசூரிய, பொறியியலாளர் – உள்ளூராட்சி திணைக்களம், வடமத்திய மாகாண சபை,
T.M.R.S. ஜயம்பதி, நிகழ்ச்சி அத்தியட்சகர் – மாநகர சபை, அனுராதபுரம்
சட்டத்தரணி ஜகத் லியனாரச்சி
ஆனந்த ஜயசேகர

**வளவாளர்:** சாந்த குலதுங்க

**கணனி பக்க வடிவமைப்பு:** ஹரித்த தஹனாயக்க

**நன்றி...**
**லங்காபுர மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட பிரதேச சபை செயற்குழு மற்றும் பங்குபற்றல் ஆட்சி அமைப்பு குழுவின் உறுப்பினர்களுக்கு.**

இந்த கைநூல் அமெரிக்க மக்களின் பங்களிப்புடன், சர்வதேச அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் (USAID) நிதியுதவியுடன் டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட ஊழலை குறைத்தல் மற்றும் நல்லாட்சி முறையை மேம்படுத்தலுக்காக நிறுவனங்களின் இயலுமைகளை வலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அச்சிடப்படுகின்றது.

© அனைத்து உரிமைகளும் கொண்டது. இதில் உள்ளடக்கும் விடயங்களை பயன்படுத்துவதில்/ அச்சிடுவதில், அதற்காக டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் எழுத்து மூலம் அனுமதி பெறப்படல் வேண்டும்.

# பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் நிர்மாணப் பணிகளை கண்காணிப்பதற்கான வழிகாட்டிகள்

## பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் பிரதான நிர்மாணங்களை கண்காணிப்பதற்காக சமூகத் தலைவர்களின் அறிவுசார் இயலுமையை கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டி.

**வீதிகள் மற்றும் பொதுக் கட்டடங்களின் நிர்மாணங்களைப் புரிந்து கொள்வோம், தலையீடு செய்வோம், ஒன்றிணைந்து கட்டியெழுப்புவோம்**

# முன்னுரை

மக்களுக்கு மிகவும் நெருக்கமான உள்ளூராட்சி நிறுவனமாக பிரதேச சபையை குறிப்பிட முடியும். தனிப்பட்ட வகையில் மாத்திரமின்றி சமூக அடிப்படையிலும் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்த வேண்டிய சேவைகள் மற்றும் வசதிகள் பலவற்றிற்கு வசதியளிப்பதற்கான கடமை மற்றும் பொறுப்பு பிரதேச சபையிடம் உள்ளது.

நிறுவனம் ஒன்று மக்களுடைய நலனுக்காக செயற்படுவதற்கு குறிப்பிட்ட நிறுவனம் மக்களுடன் எத்தனை அளவு இணைந்து செயற்படுகின்றது மற்றும் அதற்கு போதிய சந்தர்ப்பம் உள்ளதா என்பது மிகவும் முக்கியமானது.

டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் தேசிய மற்றும் பிரதேச நல்லாட்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச சபைகளின் நல்லாட்சியை மேம்படுத்தல் மற்றும் ஊழலை ஒழித்தல் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துகின்றது. இங்கு மக்கள் மற்றும் பிரதேச சபைக்கு இடையில் மிகவும் பயனுறுதி மிக்க மற்றும் போதிய தொடர்பினை விருத்தி செய்வதற்கும், அதன் ஊடாக இரு தரப்பிற்கும் பயன் பெற்றுத் தருவதற்கும், இறுதியில் பிரதேச சபையை மிகவும் மக்கள் அக்கறை கொண்ட நிறுவனமாக மாற்றுவதற்கும் எதிர்பார்க்கின்றது.

இதன் அடிப்படையில் மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் செயற்குழு என்பவற்றுக்கு புரிந்துணர்வை ஏற்படுத்தல் மற்றும் பயிற்சி வழங்கல் என்பன ஆரம்ப வழிமுறைகளாக பயன்படுத்தப்பட்டன.

மக்களுக்கு அன்றாட வாழ்க்கையில் பயனுள்ளதாக இருக்கும் அடிப்படை வசதிகள் பலவற்றை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் பொறுப்புக்கள் பிரதேச சபையின் வசமே

உள்ளன. இதற்கு உதாரணமாக, வீதி மற்றும் பொதுக் கட்டடங்களை குறிப்பிடலாம். எவ்வாறாயினும், பிரதேச சபைகளினால் நிர்மாணிக்கப்படும் மற்றும் பராமரிக்கப்படும் வீதி மற்றும் வேறு நிர்மாணங்கள் தொடர்பில் மக்கள் முறைப்பாடு செய்யும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

இந்த நிர்மாணங்களில் தரம், நீடித்திருக்கும் காலம், பொருத்தப்பாடு, செலவிடப்பட்ட நிதிக்கான பயனை தருகின்றதா போன்ற விடயங்கள் பொதுமக்களின் அக்கறைக்கு உள்ளான பிரதான அம்சங்களாக குறிப்பிட முடியும். மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், நிர்மாணச் செயற்பாடுகளில் பிரதேச சபையின் பொறுப்புக்களை மேம்படுத்துவதற்கும் பயனுறுதிமிக்க முறையொன்றாக, இந்த நிர்மாணங்கள் குறித்து போதியளவிலான அறிவினை சமூகத் தலைவர்களுக்கு பெற்றுக் கொடுத்தலைக் குறிப்பிட முடியும். அதன் மூலம் குறித்த நிர்மாணங்களின் ஆரம்ப நடவடிக்கை முதல் தேவைக்கேற்ற கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை செய்தல் இயலுமை அவர்களுக்கு கிடைக்கும். இந்த செயற்பாட்டில் கிடைக்கும் மற்றுமொரு சாதகமான பலனாக, இந்த நிர்மாணம் தொடர்பில் மக்களின் பொறுப்பு மற்றும் அவர்களின் உரிமைத்துவம் குறித்து உணர்வு தோன்றுவதற்கும் அது வழிவகுக்கும்.

பிரதேச சபையின் ஊடாக முன்னெடுக்கப்படும் நிர்மாணங்களில், அது குறித்து அவதானத்துடன் இருப்பதற்கு மற்றும் தொழில்நுட்ப புரிந்துணர்வுடன் விடயத்தை மேற்பார்வை செய்வதற்கு மற்றும் தலையீடு செய்வதற்கு தேவையான அடிப்படை அறிவினை சமூகத் தலைவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதே இந்த கைநூலின் நோக்கமாக இருக்கின்றது.

பிரதேச சபையின் நல்லாட்சி மற்றும் பொறுப்புடைமையை விருத்தி செய்வதற்கு இதன் மூலம் குறிப்பிட்டளவு பங்களிப்பு கிடைக்கும் என்பது எமது நம்பிக்கையாக உள்ளது.

# உள்ளடக்கம்


வீதி நிர்மாணம் மற்றும் பராமரித்தல்

இலங்கையின் வீதி கட்டமைப்பு மற்றும் அதன் உரிமையாளர்கள்

பிரதேச சபையின் ஊடாக முன்னெடுக்கப்படும் மற்றும் பராமரிக்கப்படும் வீதிகளை அடையாளம் காணல்

வீதியொன்றை அபிவிருத்தி செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்காக வீதிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவது எவ்வாறு? அதன் போது பயன்படுத்தப்படும் விடயங்கள்

வீதி அமைக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள்

வீதியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள்

வீதி நிர்மாணித்தல் சம்பந்தமாக மக்களுக்கு உள்ள சந்தர்ப்பம்

சரளைக் கற்களை பயன்படுத்தி வீதி அமைத்தலின் கண்காணித்தல்

கற்கள் பரப்பி தார் இட்டு வீதி அமைத்தலின் கண்காணித்தல்

கொங்க்ரீட் பயன்படுத்தி வீதி அமைத்தலின் கண்காணித்தல்

சீமேந்து அடைப்புக்களை பயன்படுத்தி வீதி அமைத்தலின் கண்காணித்தல்

பொதுக் கட்டட நிர்மாணங்களின் கண்காணித்தல்

நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் அவற்றில் காணப்பட வேண்டிய சிறப்பு அம்சங்கள்

கட்டடங்கள் நிர்மாணித்தலில் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்

# மக்களால் முன்னெடுக்கப்படும் கண்காணிப்பு என்பது என்ன?

இலங்கை மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி, தமது பிரதிநிதிகளை நியமித்து உருவாக்கும் ஆட்சி அதிகார அமைப்பு மூன்று உள்ளது. ஜனாதிபதி தலைமையிலான பிரதான மத்திய அரசாங்கம், மாகாண சபை என்பன இவற்றில் இரண்டு அமைப்புக்களாகும். மற்றைய அதிகார அமைப்பாக இருப்பது உள்ளூராட்சி சபை நிறுவனங்களாகும். மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் செயற்படக் கூடிய மற்றும் எமக்கு மிகவும் நெருக்கமான அங்கமாகும். மக்களுக்கு இவற்றின் மூலம் சேவை வழங்குவதற்கு பங்களிக்கக் கூடிய தேவையான நெறிமுறைகள், அவற்றின் சட்டமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நல்லாட்சியை சிறந்த நிலையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான விடயங்களில் மக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இதன் பிரகாரம் வேறுபட்ட நிறுவனங்கள் மற்றும் அரசினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு செயற்றிட்டங்களில் மக்களின் பங்களிப்பு மற்றும் அவர்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். அதற்குக் காரணம், குறித்த பிரதேசத்தின் தேவைகள் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வு பிரதேசத்தில் வாழும் மக்களிடமே காணப்படும்.

தமது பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் நிர்மாணங்கள் மற்றும் பராமரித்தலின் தன்மைகள், தரங்கள் மற்றும் பயன்பாடு போன்ற விடயங்களை எளிய முறைகளைப் பயன்படுத்தி, மக்களே தேடி அறிந்து கொள்வதனை மக்கள் கண்காணிப்பு என விளக்கலாம். உதாரணமாக நிர்மாணத்திற்காக செங்கற்களின் உறுதித் தன்மையை கணித்தல், அதன் நிறத்தை பரிசோதித்துப் பார்த்தல், குறிப்பிட்ட உயரத்தில் இருந்து தரைப் பகுதியில் வீழ்வதற்கு திட்டமிடல் என்பவற்றை கருதலாம். இதற்காக தொழில்சார் அறிவோ அல்லது விசேட கருவிகளோ தேவைப்படாது.

மக்கள் கண்காணிப்பு நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது நடைமுறைகள் இல்லை என்பதுடன், அவை குறிப்பிட்ட மக்களின் செயற்றிட்டத்திற்கு மிகவும் முக்கியமானவையாக இருக்கலாம். எனவே, இங்கு பயன்படுத்தப்படும் சில முறைகள் பங்குபற்றுபவர்களின் அறிவு, புரிந்துணர்வு, குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் தன்மை என்பவற்றின் அடிப்படையில் வேறுபடும்.

# மக்கள் பங்குபற்றலுடன் இடம்பெறும் கண்காணிப்பின் முக்கியத்துவம்

மிகவும் முக்கியமாக மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பல்வேறு நிர்மாணங்களுக்கு செலவிடப்படும் நிதி, பிரதேச மக்களுக்கு அதிகபட்ச அளவில் சேவை மற்றும் பயனை பெற்றுத் தரும் வகையில் செலவிடப்படுகின்றதா என்பதனை ஆராய்வது மிகவும் முக்கியமாகும். இந்த நிர்மாணங்களில் இறுதிப் பயனாளிகளாக மக்கள் இருப்பதுடன், அவர்களுக்கு அது தொடர்பில் உரிமை மற்றும் பொறுப்பு உள்ளது. மக்கள் கண்காணிப்பினை வலுப்படுத்துவதன் மூலம், குறிப்பிட்ட செயற்றிட்டத்திற்காக பயன்படுத்தப்படும் தொழில்சார் தொழில்நுட்ப அறிவிற்கு அப்பால், மக்களுக்கு அவர்களின் அனுபவம் மற்றும் பழக்கங்களை பிரயோகிப்பதற்கான வசதியை வழங்குவதன் மூலம் செயற்றிட்டம் மேலும் வெற்றிப் பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அவ்வாறே, தனிப்பட்ட ரீதியில் இடம்பெற்ற இடையீடுகளுக்கு அப்பால் மக்கள் என்ற அடிப்படையில் ஒருங்கிணைந்த கண்காணிப்பு செய்வதும், கோரிக்கைகளை முன்வைத்தலும், அழுத்தம் செலுத்தலில் பயனுறுதி மிக்க பலனைத் தரும்.

குறிப்பிட்ட செயற்றிட்டம் ஒன்றில் மக்களின் தேவை, முன்னுரிமை மற்றும் அவர்களின் எதிர்பார்ப்பு தொடர்பில் அக்கறை செலுத்தி நடவடிக்கை எடுத்தலின் மூலம், குறித்த நிர்மாணங்களில் தமது கருத்து அவதானத்தில் கொள்ளப்பட்டதாகவும், அது குறித்து தமது பொறுப்பும் உள்ளது என மக்களுக்கு உணர்வு ஏற்படும். இதன் மூலம்

குறித்த நிர்மாணத்தை பாதுகாப்பதற்கு, பராமரிப்பதற்கு அவர்களுக்குள் உணர்வு ஏற்படும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகளின் செயற்குழுவானது மக்கள் நாளாந்தம் சந்திக்கும் அயலவர்களாகவும், உறவினர்களாகவும் இருப்பர். மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு மிகவும் நெருக்கமான கிராம வீதிகள், சிறு பாலங்கள் மற்றும் பொது நிர்மணங்களை அமைப்பது இந்த அங்கங்களாகும். இந்த நிர்மாணங்களில் தமது உழைப்பினை வழங்குதல் மற்றும் அந்த செயற்றிட்டம் இடம்பெறும் விதம் தொடர்பில் மிகவும் சிநேகமான வகையில் தேடியறிதல் என்பவற்றின் ஊடாக இந்த நிர்மாணங்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கும் வகையில் உயர்தரத்துடன் நிர்மாணிப்பதற்கு இயலும். அது குறித்து அறிவினைப் பெற்றுக் கொள்வதன் மூலம், இந்த நிர்மாணங்களை மேலும் சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு இரு தரப்பினராலும் சிறந்த பலனை பெற்றுக் கொள்வதற்கு இயலும். இதன் மூலம் அன்னியோன்னிய புரிந்துணர்வு ஏற்பட்டு, பௌதீக நிர்மாணம் இடம்பெறும் அதேவேளை நட்பு மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் காரணமாக அமையும்.

# இலங்கையின் வீதிக் கட்டமைப்பு மற்றும் அவற்றின் உரிமையாளர்கள்

நாட்டின் அபிவிருத்தியில், அந்த நாட்டில் நிலவும் அடிப்படை வசதிகளில் நெடுஞ்சாலைகளுக்கு குறிப்பிட்டளவு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் வீதி கட்டமைப்புக்களின் ஒட்டுமொத்த தூரம் சுமார் 110,000 கிலோமீற்றர்களாகும். இந்த வீதிக் கட்டமைப்புக்கள் A, B, C, D மற்றும் E எனவும், வகைப்படுத்தப்படாத வீதிகள் எனவும் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் நிர்மாணம், பராமரித்தல் என்பன அடிப்படையாக மூன்று நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலைகளாக அறியப்படும் A மற்றும் B வீதிகள் மத்திய அரசாங்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்டதாகும்.

C மற்றும் D வீதிகள் மாகாண சபைக்கு உட்பட்டதாகும்.

E மற்றும் வகைப்படுத்தப்படாத வீதிகள் உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்டதாகும்.

A, B வகை வீதிகள் 11,000 கிலோமீற்றர்கள் வரை உள்ளதுடன், C மற்றும் D வகை வீதிகள் 18,000 கிலோமீற்றர்கள் வரையானதாக உள்ளன. E மற்றும் வகைப்படுத்தப்படாத வீதிகள் 80,000 கிலோமீற்றர்களுக்கு அதிகமானதாக உள்ளன. இதன் பிரகாரம் ஒட்டுமொத்த வீதி கட்டமைப்பில் பெருமளவிலான நிர்மாண, அபிவிருத்தி மற்றும் பராமரித்தல் பொறுப்புக்கள் மாநகர சபை, நகர சபை மற்றும் குறிப்பாக பிரதேச சபையின் வசம் உள்ளன.

# பிரதேச சபையின் ஊடாக முன்னெடுக்கப்படும் மற்றும் பராமரிக்கப்படும் வீதிகளை அடையாளம் காணல்

தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் பெறும் பிரிவுகளுக்கு உட்பட்ட வீதி அபிவிருத்திகள் மிகவும் முக்கியம் பெறுவதுடன், பிரதேச சபையின் கீழ் வரும் கிராம வீதிகளுக்கும், அதற்கு சமனான முக்கியத்துவம் உள்ளது. இன்றும் இலங்கையின் பெரும்பாலான மக்கள் தொகை கிராமப் பகுதிகளிலேயே வசிக்கின்றது. இந்த மக்கள் தேசிய நெடுஞ்சாலைகளை மிகவும் அரிதாகவே பயன்படுத்துவதுடன், அவர்கள் தமது நாளாந்த தேவைகளுக்காக இந்த கிராம வீதி கட்டமைப்புக்களையே பயன்படுத்துகின்றனர். இந்த வீதியை நாளொன்றில் பல தடவைகள் அவர்கள் பயன்படுத்துகின்றனர். எனவே, மக்களுக்கு மிகவும் நெருக்கமான வீதி கட்டமைப்பாக கிராம வீதிகளை குறிப்பிட்ட முடியும்.

தற்போதுள்ள புள்ளிவிபரத் தரவுகளின் அடிப்படையில் கிராம வீதிகள் 80,000 கிலோமீற்றர்கள் வரை உள்ளதுடன், இது குறித்த பொறுப்புக்கள் அனைத்தும் பிரதேச சபையின் வசமே உள்ளன. அதனைத் தவிர, வருடாந்தம் மேலும் பல கிலோமீற்றர் வீதிகள் இந்த வீதிக் கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்படுகின்றன. இதற்கு காரணம் மக்கள் தொகை அதிகரிப்பதுடன், காணிகள் பிரித்துக் கொடுக்கப்படுவதனால் ஆகும். இதன் பிரகாரம் ஒரு பிரதேச சபை எல்லைக்குள் ஆகக் குறைந்தது 1 கிலோமீற்றர் முதல் 2 கிலோமீற்றர் வரை புதிதாக இணைத்துக் கொள்ளப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த கிராம வீதிகள் தொடர்பில் உடனடியான அபிவிருத்தி திட்டத்தினை கண்டறிய முடியாது. இதன் காரணமாக இந்த வீதி அபிவிருத்திக்காக கடனுதவி பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்படுகின்றது.

அதனால் பிரதேச சபையிடம் உள்ள வீதி நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தலுக்குத் தேவையான நிதி, தொழில்நுட்பம் மற்றும் வேறு வசதிகளை பெற்றுக் கொள்வது நெருக்கடியான விடயமாக உள்ளது.

இதன் காரணமாக தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதியை முறையாக பராமரிப்பதிலும், புனர் நிர்மாணம் செய்வதிலும் நிர்மாணத்தின் தரம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

**பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்படும் மற்றும் பராமரிக்கப்படும் வீதி மக்களின் அவசரத் தேவையாக இருப்பதுடன், இந்த நிர்மாணம் தொடர்பில் மக்களின் கண்காணிப்பு மற்றும் அக்கறை மிகவும் முக்கியமானதாக உள்ளது.**

# அபிவிருத்திக்காக வீதியை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

வீதி நிர்மாணம் தொடர்பில் பாரிய பொறுப்பு மற்றும் கடமை பிரதேச சபையிடம் உள்ள போதும், அதற்குத் தேவையான போதியளவு வளம் மற்றும் இயலுமை பெரும்பாலான பிரதேச சபைகளிடம் இல்லை. அவ்வாறே, அதற்கான முறையான வகையில் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டமும் சில பிரதேச சபைகளிடம் இல்லாமையும், வளம் பெற்றுக் கொள்வதில் தடையாக உள்ளது. அதனால் வீதி அபிவிருத்தியில் பொது மக்களுக்கு அதிக சேவை வழங்கும் வீதிகளுக்கு, முன்னுரிமை அளித்து அபிவிருத்தி செய்யப்படுவதற்கான வீதியாக அடையாளம் காண்பதற்கான தேவை உள்ளது. பிரதேச சபையினால் வீதி அபிவிருத்தி செய்யப்படும் போது இந்த விடயங்கள் தொடர்பில் பொது மக்கள் அவதானமாக இருப்பின், அது குறித்து தனியார் அல்லது வேறு இலாபத்தின் அடிப்படையில் இன்றி மக்களுக்கு அதிக சேவை வழங்கும் வீதியின் அபிவிருத்திக்காக முன்னுரிமை வழங்கப்படுகின்றது என்பதனை உறுதி செய்ய முடியும்.

# அபிவிருத்தி செய்வதற்காக வீதிகளுக்கு முன்னுரிமை வழங்கும் போது அவதானிக்க வேண்டிய அம்சங்கள்

1. வீதியின் இரு மருங்கிலும் அமைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை

இதன் மூலம் கருதப்படுவது யாதெனில், வீதியின் இருமருங்கிலும் எந்த எண்ணிக்கையிலான மக்கள் வசிக்கின்றார்களோ, அல்லது தமது வீட்டிற்கு பயணிப்பதற்கு எந்த எண்ணிக்கையிலான மக்கள் இந்த வீதியை பயன்படுத்துகின்றார்கள் என்பதாகும்.

2. இந்த வீதியின் ஊடாக அடையக் கூடிய பொருளாதார ரீதியாக முக்கியத்துவமான மற்றும் சேவை வழங்கும் இடங்கள்.

பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் பெறும் இடங்கள் - இதன் மூலம் கருதப்படுவது யாதெனில், இந்த வீதிக்கு அருகில் சந்தை, தொழிற்சாலை அல்லது வாழ்வாதாரம் ஈட்டுவதுடன் தொடர்புடைய இடங்கள் அமைந்துள்ளதா என்பதாகும். சேவை வழங்கும் இடங்களாக, வைத்தியசாலை, பாடசாலை, அரச அலுவலகங்கள் போன்ற பொது சேவை வழங்கும் நிறுவனங்கள் அமைந்துள்ளதா என்பதனை குறிக்கின்றது.

3. குறித்த வீதிக்கும் பிரதான வீதிக்கும் இடையிலான இணைப்பு

இந்த வீதியின் ஊடாக மேலும் வீதிகளுக்கு இணைப்பு உள்ளதா? மிக முக்கியமாக பிரதான வீதிகளை அடைவதற்கு இந்த வீதியை பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதனை குறிக்கின்றது.

**இதன் அடிப்படையில் உங்களுடைய பிரதேச சபை வீதி அபிவிருத்தியில் முதலாவது அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யும் மேலே குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வீதிகளா என்பது குறித்து நீங்கள் அவதானமாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லை எனின், குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் உங்களுடைய குழுவின் ஏனையோருடன் ஒன்றிணைந்து கலந்துரையாடி, பிரதேச சபையில் அது குறித்து கோரிக்கை முன்வைக்க முடியும்.**

# வீதி அமைக்கும் முறையை தீர்மானிப்பதில் அவதானிக்க வேண்டிய விடயங்கள்

வீதி அமைப்பதில் அவதானித்து பார்க்க வேண்டிய பிரதான விடயங்கள் பல உள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் அவதானிக்காது செயற்படின் குறித்த வீதிகளின் சிறப்புத் தன்மை மற்றும் நீடித்திருக்கும் தன்மையில் தாக்கம் ஏற்படும். வீதியொன்றை அபிவிருத்தி செய்தல் / நிர்மாணித்தலின் போது பின்வரும் விடயங்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

1. குறித்த வீதியில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை

இதன் மூலம் கருதப்படுவது யாதெனில், நாளொன்றுக்கு இந்த வீதியில் எத்தனை எண்ணிக்கையிலான வாகனங்கள் பயணிக்கின்றன என்பதனையாகும். குறித்த வீதியை திட்டமிடும் போது, அதில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் தன்மை தொடர்பில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

2. வீதி நிர்மாணிக்கப்படும் பிரதேசத்தின் வானிலை

இதன் மூலம் கருதப்படுவது யாதெனில் குறித்த வீதியானது அதிக மழை பொழியும் பிரதேசத்தில் அமைக்கப்படுகின்றதா, அல்லது சாதாரண காலநிலை நிலவும் பிரதேசத்தில் அமைக்கப்படுகின்றதா என்பதனையாகும்.

3. வீதியின் சராசரி சரிவு

இந்த வீதி அமைக்கப்படுவது சமதரையிலா அல்லது மலைப்பாங்கான இடத்திலா என்பதனை குறிக்கின்றது.

மேலே குறிப்பிட்ட விடயங்களுக்கு அமைய இந்த வீதி திட்டமிடப்பட்டு தயாரிக்கப்படல் வேண்டும். இந்த திட்டமிடலில் குறித்த வீதிக்காக பயன்படுத்த தகுதியான மூலப்பொருட்கள் எவை என்பதனை தீர்மானிக்க முடியும்.

# கிராம வீதிகளை திட்டமிடும் போது பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகள் மற்றும் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம

கிராம வீதிகளை பின்வரும் வகையில் நாம் பிரித்து அடையாளம் கண்டு கொள்ள முடியும்:

- மணல் வீதி
- சரளைக் கல் வீதி
- தார் இடப்பட்ட வீதி
- கொங்க்ரீட் இடப்பட்ட வீதி
- சீமேந்து தொகுதிகள் இடப்பட்ட வீதி
- கார்பட் இடப்பட்ட வீதி

சாதரணமாக இலங்கையில் பெரும்பாலான வீதிகள் தார் இடப்பட்ட வீதிகளாகவே உள்ளன. முறையாக நிர்மாணிக்கப்பட்டு, முறையாக பராமரிக்கப்படுமாயின் மாத்திரமே இந்த வீதிகள் நீண்ட காலத்திற்கு காணப்படுவதுடன், இதற்காக தாங்கிக் கொள்ள வேண்டிய செலவும், அண்ணளவில் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. சில வீதிகளுக்கு சரளைக் கற்களை இடுதல் மாத்திரம் போதுமானது. இருப்பினும் அண்மைக் காலமாக கிராம வீதிகள் பல கொங்க்ரீட் இடப்பட்டதாக அமைக்கப்படுவதனை காணக் கூடியதாக உள்ளது. வீதி தொடர்பில் முறையாக ஆய்வு கற்கை முன்னெடுக்காது அனைத்து வீதிகளுக்கும்

கொங்க்ரீட் இடுவது அதிக செலவினை ஏற்படுத்துவதுடன், வளம் வீணாகிப் போகும் செயற்பாடாகவும் கருத முடியும். அவ்வாறே சீமேந்து கற்களை பயன்படுத்தி வீதி நிர்மாணித்தலையும் அவதானிக்கக் கூடியதாக இருப்பதுடன், அதுவும் அதிகம் விரயம் ஏற்படும் முறையாகும்.

பிரதேச சபை போன்ற பொது மக்களின் நிதியினால் பராமரிக்கப்படும் மற்றும் குறித்த பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக தேவையான நிதி மானியத்தினை தேடியறிவதில் சிக்கலில் உள்ள நிறுவனம், தமது வரையறையான வளங்களின் அதிக பயன்பாட்டினைத் தரும் வகையில் பயன்படுத்துகின்றதா என்பதனை பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் கண்காணித்தல் வேண்டும். இதன் பிரகாரம் ஏற்கனவே குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து வீதி தயாரிப்பதற்கு மிகவும் பொருத்தமான மூலப்பொருளை தெரிவு செய்தல் வேண்டும்.

| |
|---|
| இதன் பிரகாரம் வீதியொன்றை திட்டமிடுவதில் மிகவும் பொருத்தமான முறையை பயன்படுத்துகின்றனரா என்பது தொடர்பில் நீங்கள் அவதானமாக இருக்க முடியும். |

**இங்கு அடிப்படையாக சரளைக் கற்கள், தார், கொங்க்ரீட் மற்றும் சீமேந்து கற்கள் இடப்படும் வீதிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.**

# சரளைக் கற்களைப் பயன்படுத்தி வீதி நிர்மாணித்தல் மற்றும் கண்காணித்தல்

எந்தவொரு வீதியையும் அளவிடுவதில் முதலாவது நடவடிக்கையாக இருப்பது வீதி நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்படும் இடத்தின் அளவினை அடையாளம் கண்டு, உறுதி செய்து கொள்வதாகும். அங்கு தற்போதுள்ள மரங்கள், செடிகள் போன்றவற்றை வேருடன் அகற்ற வேண்டும். அதன் பின்னர், வீதிக்கு குறுக்கே நீரோட்டம் செல்லும் பகுதி அல்லது தாழ்வான பகுதியினை அடையாளம் கண்டு அதற்கு பொருத்தமான வகையில் கடவை அல்லது பாலம் ஒன்றை அமைக்க வேண்டும். வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் காணப்படும் பள்ளங்கள், மேடுகளை நீக்கி வீதியை மட்டமாக்கல் வேண்டும். இதற்காக உள்ள மோட்டார் ரோலர் இயந்திரத்தை பயன்படுத்துவது, மிகவும் பொருத்தமானதாகும்.

வீதியின் இருமருங்கும் உள்ள காண்களை வெட்டி நீர் வேகமாக செல்லக் கூடிய வகையில் தயாரிக்க வேண்டும். வீதியின் மேற்பகுதியில் வாகனப் போக்குவரத்து மற்றும் நீண்ட காலம் நிலைத்திருப்பதற்கு பொருத்தமான வகையில் தயாரிப்பதற்கு வீதியின் மேற்பகுதிக்கு சரளைக் கற்கள் போட்டு நிரப்பல் வேண்டும்.

வீதியின் நீளம் மற்றும் ஆழம் மற்றும் சரளைக் கற்களின் தடிப்பு என்பவற்றை அவதானித்து, தேவையான சரளைக் கற்களின் அளவினை தீர்மானிக்க வேண்டும்.

தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் வீதியாய் இருப்பின், அங்கு போக்குவரத்துக்கு தடை ஏற்படாத வகையில் சரளைக் கற்களை குவிக்க வேண்டும்.

**உங்களுடைய கண்காணிப்புக்காக:**
1 மைல் நீளமான (கிலோமீற்றரில்) வீதி, 10 அடி அகலம் மற்றும் 6 அங்குல தடிப்புடன் நிர்மாணிக்கப்படுவதுடன், சரளைக் கற்கள் இட்டு நிரப்புவதற்கு, 659 கியூப் தேவைப்படும்.
அதன் பிரகாரம் தேவையானளவு சரளைக் கற்கள் இதற்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதனை நீங்கள் ஆராய்ந்து பார்க்கலாம். இந்த அளவு சாதாரணமாக டிரக்டர் டேலர் 879 ஆவதுடன், கியூப் 3 அளவிலான டிப்பர் 220 வரையாக இருக்கும்.

**சரளைக் கற்கள் பரப்பல் மற்றும் பதித்தல்**

சரளைக் கற்களை இட்டு நிரப்புவதற்கு மோட்டார் ரோலர் பயன்படுத்துவது, மிகவும் பொருத்தமானதாக இருப்பதுடன், பயன்படுத்தப்பட்டுள்ள சரளைக் கற்களை நன்றாக நீர் பாய்ச்சி, மோட்டார் ரோலர் இயந்திரத்தினை பயன்படுத்தி, அத்துடன் 8-10 தொன்கள் கல் ரோலரினால் பதித்தல் வேண்டும். போதிய அளவில் பதித்தலை நன்றாக செய்ய வேண்டுமாயின், கல் ரோலரை 6 – 8 தடவைகள் சரளைக் கற்களின் மேல் உருட்டல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வகையில் சரளைக் கற்களை பரப்பி தயாரிக்கப்பட்ட வீதி, சரளைக் கல் வீதி என குறிக்கப்படுவதுடன், கிராமப் பகுதிகளில் பெரும்பாலும் இவ்வாறான வீதிகளே உள்ளன.

இவ்வாறு சரளைக் கற்கள் இடப்பட்ட பாதையில், கற்கள் இட்டு, தார் இட்டு அல்லது கொங்க்ரீட் இட்டு அல்லது சீமேந்து கற்தொகுதிகளை இட்டு வீதியை மேம்படுத்தல் செய்தல் முடியும்.

முறையான வகையில் சரளைக் கற்கள் இடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட வீதி



# கல் பரப்பி தார் இடப்பட்ட வீதி தயாரித்தல் மற்றும் அதனை கண்காணித்தல்

தார் இட்டு தயாரிக்கப்பட்ட வீதியின் அகலம் 10 அடியாக இருக்க வேண்டுமாயின், சரளைக் கல் வீதியின் அகலம் 16 அடியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வகையில் சரளைக் கல் வீதியை தயாரித்து, அதன் பின்னர் கல் பதித்து தார் இடல் முடியும். இதற்காக முதலில் 4 x 4 அளவில் கருங்கல் படையொன்றை பதித்து, அதனை 8-10 தொன்கள் கல் ரோலரினால் அழுத்தல் வேண்டும். அதன் பின்னர் 1.5 அங்குலத்திற்கு கருங்கற்கள், இரண்டு படைகளை பரப்பி, பதித்தல் வேண்டும். மேற்பகுதியில் இடைவெளிகளை நிரப்புவதற்கு ¾ அங்குல மெட்டல் 10% பரப்பி, கல் ரோலரினால் பதித்தல் வேண்டும். வீதி நிறைவடையும் இடத்தில் தாழ்வாகும் வகையில் வீதி நிர்மாணத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

4 x 4 அளவில் கல் படையொன்றை பரப்பி அடித்தளம் தயாரிப்பதற்கு பதிலாக, தற்போது ABC (Aggrigate Base Concrete) எனப்படும் கலவை தேவையான சதவீதத்தில் பயன்படுத்தி பதித்தல் முறையும் பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு சதுர மீற்றர் மேற்தளத்திற்காக 2 லீற்றர் தார் இடும் வகையில், சூடான தாரினை முதலாவதாக இடல் வேண்டும். அதாவது 180 லீற்றர் தார் பீப்பாய் ஒன்றில், 10 அடி அகலமான, 10 அடி நீளமான வீதிக்கு தார் இடல் முடியும்.

தார் இட்டவுடன், இடப்பட்ட தார் மூடும் வகையில் மணல் இடல் வேண்டும்.

**உங்களுடைய கண்காணிப்புக்காக:**

• ஒரு கிலோமீற்றர் வீதிக்கு தார் இடுவதற்காக 33 தார் பீப்பாய்கள் அவசியம்.

• ஒரு கிலோமீற்றர் வீதிக்கு இரண்டாவது தடவை தார் இடுவது, 2 -8 வாரங்களுக்குள் இடம்பெற வேண்டும். இதற்காக 17 தார் பீப்பாய்கள் வரை அவசியம்

முதல் முறை தார் இட்டு 2-8 வாரக் காலப் பகுதியில் இரண்டாவது தடவை தார் இடல் வேண்டும். அதற்காக 2 சதுர மீற்றருக்கு, சூடான ஒரு லீற்றர் தார் என்பதன் அடிப்படையில் இரண்டாவது தடவையாக தார் இடுதல் வேண்டும்.

இதன் போது 180 லீற்றர் தார் பீப்பாய் ஒன்றின் மூலம் 10 அடி அகலமான வீதியில், 200 அடி நீளத்திற்கு இரண்டாவது தடவை தார் இடலாம். தார் இட்டவுடன் பூசப்பட்ட தார் முழுவதும் மூடக் கூடிய வகையில் உலர்ந்த மணலை இடல் வேண்டும்.

தார் பூசப்பட்ட வீதியில் தார் இடப்பட்ட மூலையிலிருந்து 3 அடி வரை அகலத்திற்கு வீதியின் இரு மருங்கிலும் சரளைக் கற்கள் இடப்பட வேண்டியது அவசியமாகும்.

முறையான வகையில் தார் இடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட வீதி



# கொங்க்ரீட் இட்டு வீதி தயாரித்தல் மற்றும் அதனை கண்காணித்தல்

சரளைக் கற்கள் இடப்பட்டு, அடித்தளம் தயாரிக்கப்பட்ட வீதிகளில், கொங்க்ரீட் இடுவதற்கு பிரதானமாக இரண்டு வழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இதற்காக 1: 3: 6 என்ற விகிதாசாரத்தில் சீமேந்து, மணல் மற்றும் கற்களை (1 ½ ) கலந்த கொங்க்ரீட் பயன்படுத்தினால், கொங்க்ரீட் படையின் ஆகக் குறைந்த பருமன் 6 அங்குலமாக இருத்தல் வேண்டும். 100 அடி நீளம், 10 அடி அகலம், 6 அங்குல பருமனிற்கு கொங்க்ரீட் இடுவதற்கு சீமேந்து மூடைகள் 56, 1 ½ அங்குல மெட்டல் 5 கியூப் மற்றும் ஆற்று மணல் 3 கியூப் என்பன அவசியமாகும்.

1: 2: 4 அங்குலம் (¾) கலவையில் கொங்க்ரீட் இடப்படுமாயின், கொங்க்ரீட் படையின் ஆகக் குறைந்த பருமன் 4 அங்குலமாக இருத்தல் வேண்டும். 100 அடி நீளம், 10 அடி அகலம், 4 அங்குல பரும் கொங்க்ரீட் இடுவதற்கு, சீமேந்து மூடைகள் 60, ¾ 3.25 கியூப், ஆற்று மணல் 2 கியூப் என்பன அவசியமாகும்.

கொங்க்ரீட் பயன்படுத்தி வீதி தயாரிக்கும் போது 10-15 அடி இடத்திற்கு கொங்க்ரீட் பகுதிகளுக்கு இடையில் இடம் விடல் வேண்டும்.

குறித்த இடைவெளில் 3/8 – ½ அங்குலம் வரையானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், தார் இட்டு மணல் இடப்படலும் வேண்டும்.

கொங்க்ரீட் படையிலிருந்து 3 அடி அகலத்திற்கு பாதையின் இரு மருங்கிலும் அமைக்கப்படல் வேண்டும். இதற்காக சரளைக் கற்களை பயன்படுத்தலாம்.

**உங்களுடைய கண்காணித்தலுக்காக:**

- 100 அடி நீளம், 10 அடி 4 அங்குல பருமனிற்கு கொங்க்ரீட் இடுவதற்காக 60 சீமேந்து மூடைகள் அவசியமாகும்.
- இந்த கொங்க்ரீட் கலவையை 45 நிமிடங்களுக்குள் பயன்படுத்தல் வேண்டும்.
- இந்த கலவை பொருந்துவதற்கு 7 நாட்கள் வரை எடுக்கும். இந்த காலத்திற்குள் வீதியை பயன்படுத்துவதனை தவிர்ப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தொழில்நுட்ப அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் இந்த நிர்மாணம் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

முறையான வகையில் கொங்க்ரீட் இடப்பட்டு நிறைவு செய்யப்பட்ட வீதி



# சீமேந்து பகுதிகள் இடப்பட்ட வீதி

சரளைக் கற்கள் இட்டு மேற்தளம் நன்கு தயாரிக்கப்பட்ட வீதிக்காக சீமேந்து கற்களை பதிக்க முடியும். இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள உள் அடிப்பகுதியின் மேல் மணல் அல்லது கற்துகள்களை இட்டு மேற்பகுதியை தயாரிக்க வேண்டும். இதற்காக பயன்படுத்தப்படும் சீமேந்துக் கற்களிற்கு இடையிலான ஆகக் குறைந்த நெருக்க சக்தி 25 நியூட்டன்களாக இருத்தல் வேண்டும். அரசாங்கத்தின் தர நிறுவனம் இதனை பரிசோதித்துப் பார்த்தல் வேண்டும்.

வீதியின் இரு மருங்கிலும் 9 x 12 அளவு கொங்க்ரீட் ஓரங்கள் இரண்டு தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கு இடையில் சீமேந்து கற்களை ஒழுங்கு முறையில் பதிக்க வேண்டும்.

வீதியின் இரு மருங்கிலும் 3 அடி அங்குலத்திற்கு வீதி ஓரங்கள் அமைக்கப்படல் வேண்டும். மண் கழுவப்பட்டு செல்லும் சந்தர்ப்பங்களில் கொங்க்ரீட் இடப்பட்ட வீதி அதிகளவில் சேதமடைவதனால் மீண்டும் புதுப்பிப்பதற்கு அதிகம் செலவாகும். எனினும், இந்த சீமேந்து கற்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட வீதியில் இந்த கற்களை அகற்றி உட்பகுதியை மீண்டும் தயாரித்து, மீண்டும் கற்களை பதிக்கக் கூடியதாக இருப்பது, இந்த முறையில் காணப்படும் இலாபகரமான நிலையாக காணப்படுகின்றது.

அவ்வாறே இந்த முறையில் பயன்படுத்தப்படும் கற்களின் நிலை சரியான தரத்துடன் இருப்பதும் மற்றுமொரு இலாபகரமான நிலையாக கருதலாம்.

**உங்களுடைய கண்காணித்தலுக்காக:**
இதற்காகப் பயன்படுத்தப்படும் சீமேந்து கற்களின் மேற்பகுதி நன்றாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனப் பார்க்கவும்.



கொங்க்ரீட் புளொக் கற்கள் இடப்பட்டு அமைக்கப்பட்ட வீதி

# வீதி மற்றும் சம்பந்தப்பட்ட வேறு நிர்மாணம்

வீதி சம்பந்தப்பட்ட வேறு நிர்மாணச் செயற்பாடுகளாக மதில், நிறுத்தல் கல் மற்றும் குழாய் வழி கடவை என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றை காப்பதன் மூலம் வீதியும், வீதியை பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல் முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டிருப்பது கிராம வீதிகளை முறையாக அமைப்பதில் பின்பற்ற வேண்டிய அடிப்படை விடயங்களாகும்.

உங்களுடைய கிராம வீதிகளை அமைப்பதில், மேற்குறிப்பிட்ட அடிப்படை தரங்களுக்கு அமைய நிர்மாணிக்கப்படுகின்றதா என்பதனை ஆராய முடியும்.

தரங்களுக்கு அமைவானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள்

இந்த அனைத்து நிர்மாணங்களுடன் சம்பந்தப்பட்ட கணிப்பிடு மற்றும் தேவைக் குறிப்புகள் பட்டியல் ஒன்று இருக்கும். இந்த தகவல்களை பிரதேச சபையிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இதனைத் தவிர, நிர்மாணம் தொடர்பில் பொறியியலாளருக்கு மாகாண சபை ஆணையாளர் நாயகத்திற்கு மாகாண கணக்காய்வு அதிகாரி எழுத்து மூலம் முறைப்பாடு செய்ய முடியும்.

ஒழுங்கான முறையில் இல்லையெனின், இறுதிக் கொடுப்பனவை வழங்காது இருப்பதற்கு பிரதேச சபையை வலியுறுத்த முடியும்.

# வீதி சேதமடையக் கூடிய முறை மற்றும் அவற்றை பாதுகாப்பதற்கு மக்கள் பங்களிக்கக் கூடிய விதம்

வீதி சேதமடையக் கூடிய வழிகளில் பிரதானமானதாக இருப்பது வீதியின் மேற்பகுதியில் நீர் தேங்குதல் மற்றும் வீதி ஊடாக நீரோட்டம் செல்லல் என்பனவாகும். வீதியின் இரு மருங்கிலும் காண்கள் நிரம்புவதால் மற்றும் வீதியின் ஓரம் வசிப்பவர்களினால் பல்வேறு காரணங்களினால் காண்கள் நிரம்புவதால் ஆகும்.

உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள இந்த வீதியை பராமரிப்பதற்கு நீங்கள் பங்களிக்க முடியும். வீதியின் இரு மருங்கிலும் உள்ள காண்களில் மணல் மற்றும் வேறு பொருட்களை வீசாது இருத்தல். அத்துடன், அவ்வாறான பொருட்களை உங்களால் இலகுவாக அகற்றவும் முடியும். பாதையோரங்களில் வளர்ந்திருக்கக் கூடிய செடி, கொடிகளை வெட்டி அகற்றல், வீதியில் தேங்கி நிற்காதவாறு திட்டமிடல் என்பவற்றின் மூலம், உங்களுடைய வாழ்க்கையுடன் மிக நெருக்கமானதாக அமைந்துள்ள இந்த வீதிகளை பாதுகாக்க முடியும். அதேவேளை, வீதிக்கு தீங்கு ஏற்படும் வகையில் ஏதேனும் நடவடிக்கைகளை காணும் பட்சத்தில், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது.
அவ்வாறே, குறிப்பிட்ட எடை கட்டுப்பாட்டுக்கு அப்பால் எடையை கொண்டு செல்லும் வாகனங்கள் தொடர்பிலும் அதிகாரிகளுக்கு அறிவித்து, அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் ஒன்றாக அணிதிரண்டு எதிர்ப்பினை தெரிவித்தல் போன்ற நடவடிக்கைகளின் ஊடாக இந்த வீதியை பாதுகாப்பது உங்களுடைய கடமையாகும்.

# வீதி நிர்மாணத்தின் போது மக்கள் பங்களிக்கக் கூடிய வழிகள்

வீதியொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடும் சந்தர்ப்பம் முதல், அதனை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் என அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்களுக்கு இந்த செயற்பாட்டுடன் தொடர்புபடுவதற்கான தகுதியும், பொறுப்பும் உள்ளது. மிகவும் முக்கியமாக தம்மால் எப்போதும் பயன்படுத்தப்படும் கிராம வீதிகள் தொடர்பில் எந்தவொரு நபருக்கும் விசேட பொறுப்பு உள்ளது. இதனால் பிரதேச சபை இந்த மக்கள் ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும் என்பதுடன், மக்கள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். வீதி நிர்மாணத்திற்கு மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதன் ஊடாக வீதி நிர்மாணத்தின் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கும், செலவினை குறைப்பதன் ஊடாக அதிக நீளத்திற்கான வீதியை அமைப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதனைத் தவிர வீதி அமைப்பதற்கு பங்களிப்பதன் ஊடாக மக்களுக்கு இந்த பாதை எமது பாதை, இதனை நாம் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு உருவாகும்.

# பொதுக் கட்டடங்களின் நிர்மாணக் கண்காணிப்பு

பிரதேச சபை ஊடாக பல்வேறு கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. அந்த பல்வேறு நிர்மாணங்களிற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் அவற்றின் கலவை அளவு சம்பந்தப்பட்ட நிர்மாணங்களின் அடிப்படையில் வேறுபடும். அதனால், இங்கு பயன்படுத்தப்படும் கலவை அளவு ஒரேயளவானதாக வைத்திருப்பது சிக்கலானது. அதனால் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் நிர்மாணம் தொடர்பான முன்னெடுக்கக் கூடிய கண்காணிப்பு குறித்து இங்கு விளக்கப்பட்டுள்ளது.

பிரதேச மட்டத்தில் பொதுக் கட்டடங்கள் நிர்மாணிப்பதில் பிரதேசத்தில் வழங்கக் கூடிய நிர்மாணப் பொருட்களை பயன்படுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும். பிரதேச சபையின் ஊடாக நிர்மாணிக்கப்படுவது பொது மக்களுக்கான கட்டடங்களாக இருப்பதுடன், அவற்றை நிர்மாணிப்பதில் பொது மக்களின் கண்காணிப்பு மிகவும் அவசியமாகும்.

இங்கு முதலில் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் அவற்றில் இருக்க வேண்டிய சிறப்பு தன்மைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கும். இதன் மூலம் நிர்மாணத்திற்கான சிறப்பு தன்மையுடனான பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை நீங்கள் பரிசோதித்துப் பார்க்க முடியும்.

**கருங்கல்**

வெடி வைத்து உடைக்கப்பட்ட குறிப்பிட்ட அளவிலான கருங்கற்களே நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும். இரசாயனப் பொருட்களை பயன்படுத்தி அல்லது நெருப்பு வைக்கப்பட்டு உடைக்கப்பட்ட கருங்கற்களை நிர்மாணத்திற்காக பயன்படுத்துவது பொருத்தமானது அல்ல.

6 x 9 அங்குல கருங்கல், 1 ½ அளவான மெட்டல், ¾ மெடல் போன்ற பல்வேறு அளவிலான கருங்கற்கள் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படுவதுடன், அது அனுமதிக்கப்பட்ட அளவில் இருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட அளவிற்கு பாரிய கற்களை பயன்படுத்துவது பொருத்தமானது அல்ல.

கல்லின் மேற்புறத்தில் தார், எண்ணெய் (மசகு எண்ணெய்) போன்றன ஒட்டியிருத்தல் கூடாது,

வெடிப்பு ஏற்பட்டிருக்கும் கற்கள் பயன்படுத்தப்படக் கூடாது.

# தன்மையில் சிறந்த கருங்கல்லை அடையாளம் காண்பது எவ்வாறு?

நிர்மாணத்திற்கு பயன்படுத்தப்படும் கருங்கற்கள் ஒரே நிறத்திலானதாக இருத்தல் வேண்டும். மண்ணிறம் அல்லது சிவப்பு சார்ந்த நிறமாக இருந்தால், அவை நிர்மாணத்திற்கு பொருத்தமானது அல்ல. அவ்வாறே, அளவிற்கு ஏற்ற எடையில் இருக்கக் கூடிய கற்கள் பலமானதாக இருக்கும். நீரில் போட்டவுடன், குறைந்தளவு நீரை உறிஞ்சும் கற்களும் பலமான கற்களாகும்.

கருங்கற்களின் பலத்தை இரு வழிமுறைகளின் ஊடாக அறிந்து கொள்ள முடியும். கல்லை சுத்தியலால் தட்டும் போது, தெளிவான சத்தம் ஒன்று வெளிப்பட வேண்டும். வெடிப்புக்கள் கொண்ட கருங்கல் நிர்மாணத்திற்கு உகந்தது அல்ல.

**செங்கல்**

- செங்கல் நன்கு பிரகாசிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- 8 ¾ x 4 ½ x 2 ¾ அளவில் செங்கல் அமைய வேண்டும்.
- செங்கலின் முகப் பகுதி நன்கு அமைந்திருத்தல் வேண்டும்.
- உடைந்த அல்லது சேதமடைந்த செங்கல் பயன்படுத்தப்படக் கூடாது.
- செங்கல் பொருத்தும் போது, நன்கு நீர் ஊற்றி பயன்படுத்தல் வேண்டும்.

**உங்களுடைய கண்காணித்தலுக்காக**
செங்கல் சிறந்த நிலையில் உள்ளதா என்பதனை எவ்வாறு பரிசோதிப்பது?

- செங்கலை உடைத்துப் பார்க்கும் போது உட்பகுதியில் ஒருவிதமான வர்ணத்தில் உள்ளதா எனப் பார்த்தல்.
- செங்கல்லினால், மற்றொரு செங்கல்லினை தட்டும் போது தெளிவான சத்தம் வருகின்றதா என பரிசோதித்துப் பார்க்கவும்.
- ஐந்து அடி உயரத்திலிருந்து மணலில் போடும் போது உடையாதிருத்தல் வேண்டும்.

**ஆற்று மணல்**

- கழிவு, சிதிலங்கள் அற்றதாக இருத்தல் வேண்டும்.
- கற்கள் கலந்து இருக்கக் கூடாது.
- குறைந்த புழுதி மற்றும் பெரும் துகள்களாலான மணலாக இருத்தல் வேண்டும்.
- உலர்ந்த நிலையில் இருத்தல் வேண்டும்.

**உங்களுடைய கண்காணித்தலுக்காக**
மணலின் தன்மையை பரிசோதிப்பதற்கு, கையில் எடுத்து கீழே போடும் போது, உடனடியாக நிலத்தில் விழுந்து, கையில் எதுவும் படியாது இருக்கும் மணலே சிறந்ததாகும்.

**சீமேந்து**

- கடைகளில் கொள்வனவு செய்யும் சீமேந்து தூளாக இருத்தல் வேண்டும்.
- ஈரலிப்பாக அல்லது கல்லாகி இருக்கும் சீமேந்து பாவனைக்கு உகந்தது அல்ல.
- சீமேந்து ஈரலிக்காது மற்றும் கல்லாகாதவாறு இடத்தில் சேமித்து வைக்கப்படல் வேண்டும்.

> உங்களுடைய கண்காணிப்புக்காக
> சீமேந்தினை நீரில் கலந்த பின்னர், 45 நிமிடங்களுக்குள் பயன்படுத்தப்படல் வேண்டும். மிகுதியாகவுள்ள சீமேந்து மணலுடன் கலந்த பின்னர், பயன்பாட்டிற்கு உகந்தது அல்ல.

# கட்டட நிர்மாணத்தின் போது அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்

**கருங்கல் மதில்**

உத்தேச கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு கலவையை பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு கல்லிற்கும் சீமேந்து கலவையை இட்டு, மதில் அமைக்கப்படல் வேண்டும். மதிலின் உள்ளேயும், வெளியேயும் துவாரங்கள் மற்றும் வெடிப்புக்கள் இருக்கக் கூடாது.

பொருத்தப்படும் இடங்களில் இடைவெளி இல்லாதவாறு மதில் அமைக்கப்படல் வேண்டும்.

மதில் அமைக்கும் போது நூல் மற்றும் கயிற்றுக்கு அமைய அமைத்தல் வேண்டும்.

# பொறியியலாளர் செங்கல் மதில்

உத்தேச கணிப்பில் குறிப்பிட்டவாறு கலவை அளவு பயன்படுத்தப்படல் வேண்டும்.

செங்கல் வரிசைகளை அமைக்கும் போது, அவை ஒன்றுக்கு ஒன்று சமாந்தரமாக நூல் வைக்கப்பட்டு அமைக்கப்படல் வேண்டும்.

பொருத்தப்படும் இடங்கள் மாறும் வகையில் மதில் அமைக்கப்படல் வேண்டும்.

மதில் ஒரே பருமனில் அமைவதற்கு சமன் செய்தல் அளவு பயன்படுத்தப்படல் வேண்டும்.

நாளொன்றிக்கு அமைக்கக் கூடிய ஆகக் கூடிய உயரம் நான்கு அடிகளாகும்.

**கொங்க்ரீட் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் நிர்மாணங்கள்**

உத்தேச கணிப்பில் குறிப்பிட்டவாறு கலவை அளவு பயன்படுத்தப்படல் வேண்டும்.

கொங்க்ரீட் கலவையை 45 நிமிடங்களுக்குள் பயன்படுத்தல் வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமான அளவு நீர் பயன்படுத்தக் கூடாது.

கொங்க்ரீட் இடப்பட்டு 14 நாட்களுக்கு, தவறாது நீர் தெளித்து வரல் வேண்டும்.

தேவையான முடிவை அடைவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

கம்பிகளை பயன்படுத்தும் போது கொங்க்ரீட் அளவு குறிப்பிட்டளவு அமைதல் வேண்டும்.

**பொதுவில் உருவாகும் கட்டட நிர்மாணத்தில் அனுபவமிக்க கட்டட தொழிலாளிகளை பயன்படுத்துவதன் மூலம் மகிழ்ச்சிகரமான முடிவினை எட்டலாம்.**

எவ்வாறாயினும், இந்த எந்தவொரு நிர்மாணத்திற்காகவும் தயாரிக்கப்பட்ட உத்தேச அளவீடுகள் இருக்கின்றன. இந்த உத்தேச அளவீடுகளை நீங்கள் பரிசோதித்துப் பார்க்க முடியும். அதற்காக நீங்கள் உள்ளூராட்சி சபை செயலாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

# பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் நிர்மாணப் பணிகளை கண்காணிப்பதற்கான வழிகாட்டிகள்

**டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா**

டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா எனப்படும் ஊழலை ஒழிப்பதனை பிரதான இலக்காகக் கொண்டு செயற்படும் சர்வதேச அமைப்பான டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனத்தின் இலங்கைக்கான கிளையாகும். உலகம் முழுவதும் பல நாடுகளில் நூற்றுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்டுள்ள டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் வலையமைப்பு வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை மற்றும் நல்லாட்சி கொள்கை என்பவற்றை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் 2002ஆம் ஆண்டு முதல் இலங்கையை நேர்மையான நாடாக மாற்றும் நோக்குடன் தமது சொந்தமான பணத்தை பயன்படுத்தி சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றது.

Transparency International Sri Lanka
6, 37th Lane, Queen's Road, Colombo 3
Phone: 011 4369781 - 3
Fax: 011 2506419
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

ISBN: 978-955-1281-56-4